# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி

முனைவர் சு. குமரன்

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. கலாவதி**
**முனைவர் சு. குமரன்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : நவம்பர், 2016

வெளியீடு : **தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**
கோயம்புத்தூர் - 43.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : 18 + 418 = 436

விலை : உரூ. 300/-

**ISBN : 978 - 93 - 85267 - 13 - 0**

## Aspects of prosperous Life in Tamil Literature International Conference

Editor's : **Dr. G. Galavathi**
**Dr. S. Kumaran**

Copyright's : Editors

First Edition : November, 2016

Published : **Department of Tamil**
**Avinashilingam Institute for Home Science and Higher Education for Women,** Coimbatore - 43.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : 18 + 418 = 436

Prize : **Rs. 300/-**

# பொருளடக்கம்


81. முனைவர் ம. இராமலட்சுமி — 403
குறுந்தொகை மருதத் திணையில் ஊடல்

82. மு. ஜெயலட்சுமி — 409
அகநானூற்றில் வரகு

83. அ. தனலட்சுமி — 413
திருக்குற்றாலக் குறவஞ்சி காட்டும் வாழ்வியல்

84. முனைவர் கி. மலர்விழி — 418
அசோகமித்திரனின் 'விடிவதற்குள்' சிறுகதை உணர்த்தும் வாழ்வியல் எதார்த்தம்

85. வை. காயத்ரி — 422
தமிழர் மரபில் இயற்கையின் பதிவுகள்

86. முனைவர் க. முருகேசன் — 428
ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் புறப்பாடல் உரைத்திறன்

87. முனைவர் இரா. மணிமேகலை — 434
வேளாளர் புராணத்தில் ஏர்ப்படலம் காட்டும் வேளாண் நுட்பங்கள்

88. முனைவர் சு. சதீஷ்குமார் — 439
வாக்சர் வாக்கில் வாழ்வியல் கூறுகள்

89. கு. அரிகரசுதன் — 445
இலக்கியங்களில் விருந்தோம்பலின் மாண்புகள்

90. முனைவர் ர. காளீஸ்வரி — 450
மணிமேகலையில் அறக்கோட்பாடு

91. முனைவர் த. நாகம்மாள் — 455
நாட்டுப்புற இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டு முறைகள்

92. முனைவர் வ. பிரேமலா பிரியதர்சினி & நா. ராஜேஸ்வரி — 459
சங்க இலக்கியத்தில் சிறுதானியத்தின் பயன்பாடு

93. முனைவர் க. கிருத்திகா — 464
பெரியபுராணம் வழி வெளிப்படும் வாழ்வியல்

94. க. ருக்குமணி — 469
பட்டினப்பாலையில் புலப்படும் வாழ்வியல் சிந்தனைகள்

95. முனைவர் ப. நந்தினி — 473
பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் மனித வாழ்வியல் கூறுகள்

# 86. ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் புறப்பாடல் உரைத்திறன்

**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

எட்டுத்தொகை நூற்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகியவற்றிற்கு விளக்கவுரையும், காப்பிய ஆராய்ச்சி உரைகளும் தந்தவர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திற்கு முன்தோன்றிய செய்யுட்களையும், அதற்குப் பின்தோன்றிய செய்யுட்களையும் தன்னகத்தேக் கொண்ட தமிழ்ப்பெருநூல் புறநானூறு. இப்புறப்பாடல்களில் காட்டப்பட்டுள்ள இலக்கண, இலக்கியச் செறிவானது பண்டைத் தமிழ்மக்களின் நல்லொழுக்கத்தையும், சீரிய நாகரிகப் பண்பாட்டையும் தமிழர் உள்ளங்களில் விதைத்துள்ளது. மேலைநாட்டு இலக்கிய வாதி ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதும், தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரால் அச்சாக்கம் செய்யப்பட்டதுமான பெருமை பெற்றது புறப்பாடல். இந்நூலுக்கு உரைகண்ட அறிஞர் பெருமக்களிடையே ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் உரைத்திறன் தனித்துவம் மிக்கதாகவும், புதிய கருத்துக்களைப் பதியவைக்கும் உரையாகவும் திகழ்வதை இக்கட்டுரை படம்பிடித்துக் காட்டுகின்றது. புறநானூற்றில் உள்ள நானூறு பாடல்களில் முதல் இருநூறு பாடல் எண்ணிக்கையில் மோசிகீரனாரின் பாடல்களாக அமைந்தவை ஐந்து பாடல்கள் மட்டுமே (பாடல் எண்கள்: 50, 154, 155, 156, 186). இப்பாடல்களுக்கு துரைசாமிப்பிள்ளை உரைகண்டுள்ள தனித்துவமும், அவ்வுரையின் தனிச்சிறப்பும் இக்கட்டுரையில் விளக்கம் பெறுகின்றது.

## அறிஞர்களின் உரைத்திறன் அணுகுமுறைகள்

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் உரை எழுதும் பாடலுக்கு அடுத்து (பி-ம்) பிரதி பேதம் என்னும் குறிப்பும், அதனை அடுத்துத் திணை, துறை, விளக்கம் என்னும் பகுதியும் அமைத்து, பாடியவர்-பாடப்பட்டோர் பாடலின் பொருள் பாடலுக்குக் குறிப்புரை சொல்லுக்குச் சொல் பொருள் உணர்த்துதல் என்னும் முறையில் எழுதிச் செல்கின்றார்.

புலியூர்க் கேசிகன் பாடியவர் - பாடப்பட்டோர், திணை துறை விளக்கம், குறிப்பு: பாடலின் பொருளைச் சுருக்கமாகக் கூறுதல், திணையும் துறையும் பொருந்துமாற்றை உணர்த்துதல் பாடல் பாடலின் பொருள் சொற்பொருள் விளக்கம் என்னும் அமைப்பு முறையில் தனது உரையை அமைத்துக் கொண்டுள்ளார்.